ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத சந்த்ரமௌளீச்வராய நம:.

# ஆர்ய தர்மம்.

गर्भावासजनिप्रणाशनजराव्याध्यादिषु प्राणिनां
यद्दुःखं परिदृश्यते च नरके तच्चिन्तयित्वा मुहुः ।
दोषानेव विलोक्य सर्वविषयेष्वाशां विमुच्याभित-
श्चित्तग्रन्थिविमोचनाय सुमतिः सत्त्वं समालंब्यताम् ॥

सर्ववेदान्तसिद्धान्ते ॥

பிராணிகளுக்குக் கர்ப்பவாஸம், உற்பத்தி, நாசம், ஜரா, வியாதி முதலியவைகளிலும்; மரித்த பிறகு நரகத்திலும் யாதொரு துக்கமானது காணப்படுகின்றதோ, அந்த துக்கத்தை அடிக்கடி நன்கு ஆலோசித்து, ஸகல விஷயங்களிலும் தோஷத்தைத் தவிர வேறுகுணபாகம் அற்பங்கூட இல்லை என்பதையறிந்து, மனதிலிருக்கும் அக்ஞானமுடிச்சுப் பூராவும் போகவேண்டி உலகிலுள்ள வஸ்துக்களிலிருக்கும் ஆசையை அறவேயொழித்து ஸத்வகுண ஸ்வரூபியாய் விளங்கும் ஸ்ரீ பகவானையே எப்பொழுதும் சரணாகதியாக அடைய வேண்டும்.

சாஸ்திரங்களாலும், பெரியோர்களாலும் ஈசுவர ஆராதனம் செய்ய வேண்டுமென்று போதிப்பதற்குக் காரணம், அவர்கள் பெருமையையடைய வேண்டியல்ல. பின்னை?

संसारसर्पदष्टानां जन्तूनामविवेकिनाम् ।
चन्द्रशेखरपादाब्जस्मरणं परमौषधम् ॥

என்று சான்றோர் சாற்றியுள்ளபடி 'ஸம்ஸாரமென்னும் கொடிய அரவத்தால் தீண்டப்பட்டு மதிமயக்கம் கொண்டு 'இது ஹிதம்; இது அஹிதம்' என்கிற பகுத்தறிவு குன்றி அக்ஞானமென்னும் பிணியால் வருந்தும் ஜனங்களுக்கு அப்பிணியை அடியோடகற்றி என்றுமழிவில்லாத உத்தமமான ஸுகத்தைக் கொடுக்கவேண்டி இவ்விதம் பக்தி செய்ய வேண்டுமென்று வற்புறுத்துகிறார்களேயன்றித் தமது சொந்தப்பயனை யுத்தேசித்துக் கூறவில்லை என்பது திண்ணம். சுபம்.

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

## ஸ்ரீ ராகவன் தசரதருக்குச்செய்த உபதேசம்.

(௬௨௦-வது பக்கத்தொடர்ச்சி.)

க்ஷமா—பொறுமைஅதாவது எவ்வித துக்கம்நேர்ந்தாலும் ஸகிக்க வேண்டும். இக்கருத்தையே.

**बाह्ये चाध्यात्मिके चैव दुःखे चोत्पादिते क्वचित् ।**
**न कुप्यति न वा हन्ति सा क्षमा परिकीर्तिता ॥**

"வெளியிலுள்ள பிராணிகளால் ஒருவனுக்குத்துக்கம்நேர்ந்தாலும் தனது சரீரத்தில் வியாதியால் கஷ்டம் நேர்ந்தாலும் அதற்காகக் கோபம் கொள்ளாமலும் பிறரை ஹிம்ஸிக்காமலும் ஸகித்திருப்பதே பொறுமை." என்று ஒருவர் விளக்கியுள்ளார்.

இந்திரிய, நிக்ரஹம்—வெளியிலுள்ள இந்திரியங்கள், மனம் இவைகளைத் தனக்கு ஸ்வாதீனமாய்ச் செய்துகொள்வது.

அஹிம்ஸை—இதரபிராணிகளுக்கு சரீரம், வாக்கு, மனம் என்கிற மூன்று கரணங்களாலும் சேர்ந்தோ, தனியாகவோ அற்பங்கூட ஹிம்ஸை செய்யாமலிருப்பது.

பகவத்பக்தி—எல்லாவுலகங்களுக்கும்பதியாய்விளங்கும் ஆறு குணங்களுடன் கூடிய ஈசனிடத்தில் பக்தியுடனிருப்பது; வேதங்கள், அவற்றை யனுஸரித்த ஸ்மிருதிகள் இவைகளில் கூறிய தர்மங்களை விடாமல் அனுஷ்டிப்பது இவைபோன்ற யாதொரு சிறந்த குணங்களுண்டோ அவைகளை, அரசனே எப்பொழுதும் கைவிடக்கூடாது.

चौर्यं द्यूतं विवादं च मात्सर्यं दंभमेव च ।
क्रौर्यं लोभं भयं क्रोधं शोकं निन्द्यप्रवर्तनम् ॥
वेदविप्रयतीनां च साधूनां मानभञ्जनम् ।
निन्दां वै शून्यमनिशं त्यजेद्दूरस्स्वतो नृप ॥

பின்னும் விலக்க வேண்டியவைகளையும் ஸ்ரீ ராமர் தசரதருக்கு உபதேசிக்கின்றார்.

சௌர்யம்—சாஸ்திரங்களுக்கு விரோதமாய்ப் பிறர் பொருளை அபகரிப்பது.

த்யூதம்—பிறரை மோசம் செய்யவேண்டிச்சிலஸாமான்களைக் கொண்டு செய்யப்படும் விளையாட்டு.

விவாதம்—அநாவசியமாய் இதரர்களிடம் கலகம் செய்வது.

மாத்ஸர்யம்—பிறருடைய நற்குணங்களை ஸகியாமல் தோஷத்தைக் கூறுவது; தம்பம், கபடம், க்ரௌர்யம், தயையின்றி இதரர்களுக்குத் துரோகத்தை யுண்டுபண்ணும் குரூரமாயிருக்கும் தன்மை; லோபம்; நியாயமில்லாமல் பிறர் செல்வத்தைப்பெற விரும்புவது; பயம்; நல்ல கார்யங்களை யனுஷ்டிப்பதில் தைர்யமில்லாமை; குரோதம்; அயலாருக்கு அபகாரம் செய்யவேண்டிச் சித்தத்திற்குண்டாகும் விகாரம்; சோகம்; விரும்பிய வஸ்து கிட்டாவிடில் அதனால் மனதிற்கு ஏற்படும் விகாரம்; நிந்தியப்ரவர்த்தனம்; சாஸ்திரங்களாலும், அவைகளை நன்கு பயின்ற பண்டிதர்களாலும் அனுஷ்டிக்கக் கூடாதென்று நிஷேதிக்கப்படும் கர்மாக்களை அனுஷ்டிப்பது; வேதங்கள், வேதியர்கள், ஸன்னியாஸிகள் மற்றுமுள்ள ஸாதுக்கள் இவர்களை அவமதிப்பது.

நிந்தாம்—வீணில் இதரர்களை நிந்தை செய்வது.

பைசுந்யம்—பிறரிடத்தில் தோஷமில்லாமலிருந்தாலும் தோஷத்தைக் கற்பித்துப் பல விடங்களிலும் பேசுவது. இவைகளை ஒருவரையும் கேளாமல் தானாகவேவெகுதூரத்திற்கப்பால் விட்டுவிடவேண்டும். ஒரு காலுமிவைகளை ஸ்மரிக்கக்கூடாது—என்று உபதேசித்து மறுபடியும் கூறுகின்றதாவது.

पूर्वं त्वया तपस्तप्तं पुत्रत्वं याचितं मम ।
तस्माज्जातोऽस्मि त्वत्तोऽहं कौसल्यायां नृपोत्तम ॥
यन्मया कथितं चैतदज्ञानमलनाशनम् ।
गोपनीयं प्रयत्नेन कथनीयं न कुत्रचित् ॥

முன் ஒரு ஸமயத்தில் உம்மால் தவம் செய்யப்பட்டு அச்சமயத்தில் என்னைப் புத்திரனாகவர வேண்டுமென்று யாசிக்கப்பட்டது. ஆகையால் அரசர்களுக்குள் சிறந்த ஹே தசரதரே, உமக்கும் கௌஸல்யாதேவிக்கும் புத்திரனாக நான் அவதரித்தேன். அவ்விதம் அவதரித்த என்னால் அக்ஞானத்தாலேற்படும் மலத்தை நாசம் செய்யும் சக்தி பொருந்திய சிறந்த யாதொரு உபதேசமானது இப்பொழுது உமக்குச் செய்யப்பட்டதோ இதை நன்கு ரக்ஷிக்க வேண்டும். அநதிகாரிகளான ஒருவரிடமும் சொல்லக் கூடாது என்பதேயாகும்.

इत्युक्त्वा पितरौ नत्वा गृहीत्वाज्ञां तयोः प्रभुः ।
ययौ रथसमारूढः श्रीरामस्स्वनिकेतनम् ॥

இவ்விதம் உபதேசித்துத் தமது தகப்பனாரான தசரதரையும், தாயாரான கௌஸல்யியையும் நமஸ்காரம் செய்து அவ்விருவர்களுடைய ஆக்ஞையையும் பெற்றுக் கொண்டு பிரபுவான ஸ்ரீராகவன் ரதத்தில் ஏறிக் கொண்டு தன்னுடைய அரண்மனையையடைந்தார்.

तद्रामवचनं श्रुत्वा गतमायामलो नृपः ।
सद्भावपरिपूर्णोऽभूत् रोमाञ्चितवपुर्धरः ॥

ஸ்ரீ ராமமூர்த்தியால் செய்யப்பட்ட சிறந்த உபதேசத்தைச்செவியிற் கொண்ட தசரதசக்கிரவர்த்தியும் மாயையென்னும் தோஷத்தினின்றும் விலக்கப்பட்டவராயும், ரோமாஞ்சத்தால் புளகிதசரீரத்தோடு கூடியவராயும்மாறி ஆத்மஸ்வரூப ஞானத்தைப்பெற்று மிகவும் சந்தோஷத்தோடு கூடியவராய் விளங்கினார். இஃது ஆனந்த ராமாயணத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. இந்த உபதே

சத்தை நாமும் நன்கு அனுஷ்டிப்போமாகில் இவ்வுலகிலும், பரலோகத்திலும் அதிகமான சிரேயஸ்ஸைப் பெற்றுச் சுகித்திருக்கலாமாகையால் இதை அனைவரும் கைவிடாமல் அனுஷ்டிக்கும்படி வேண்டுகிறோம். சுபம்.

ஆர்யதர்மம் உப பத்திராதிபர்.

---

# வீண்கவலை வேண்டாம்.

(கூஅக-வது பக்கத்தொடர்ச்சி)

எந்த ஹாலிவால்நக்ஷத்திரத்தைக்குறித்து "மேலானயூகங்களைக் கொடுத்து வந்தது" எனப் புகழ்கின்றாரோ அதே ஹாலிவால் நக்ஷத்திரம் 75 வருஷத்திற்கு ஓர்முறை தோன்றும்போதெல்லாம் (ஐரோப்பிய) சக்கிரவர்த்திகளுக்குத் தீங்கு விளைந்துள்ளதென இரங்கூன் இரஞ்சிதபோதினியில் (காலஞ்சென்ற) சாமுயல் B.A. எழுதியுள்ளார். மாட்சிமையுடன் ஆக்ஷிபுரிந்து விளங்கிய 7-வது எட்வர்ட் மன்னர் பிரானவர்களின் உயிர்வாழ்க்கைக்குக் குறைவு வாராதிருக்க வேண்டுமெனவும் அவர் கடவுளைப் போற்றினர். கடைசியில் அவர் சந்தேகித்தவாறே நிகழ்ந்துள்ளதை நமது ஜோதிடரவர்களும் அறிந்திருக்கவேண்டும்.

ஹிந்து சாஸ்திரமோ "சந்த்ரமப்யுதித: கேது: க்ஷிதீசாநாம் விநாசக்ருத்" என்று திண்ணமாகக் கூறுகின்றது. அவ்விதவால் வெள்ளி ஏதோ மகத்தான புத்தி சக்தியைமனிதர்களுக்குக்கொடுத்திருப்பதாகக் கூறும் நண்பர் 9–9–24 ல் எழுதிய வியாசத்தில் பின் வருமாறு கூறியிருக்கின்றார்:—

"இந்த வர்ஷத்தில் ஒரு வால்வெள்ளி ஸெப்டம்பர்மீ 15உக்கும் டிஸம்பர் 31உக்கும் இடையில் நட்சத்திரக்காட்சி சாலைகளில் தொலைக்காட்சிக் கண்ணாடிகளில் தோன்றும். அது திரும்பவும் 1925ம் ஆண்டு பெப்ரவரி மாதம் முடிவுக்குள் வெறுங்கண்ணுக்கே தெரியும். அதன் சக்தி ஒருவிதமாகப் பூலோகத்தில்

பாய்வதால் மேலும்—இந்த வெள்ளியின் தோற்றத்தால்—பூமியின் நிலை மாறி அதன் ஓட்டமும் மாறும். பூமி சூரியனைச் சுற்றுவதைவிட்டுத் தனியாகக் கொல்லன் கிரியைப்போல் சுற்றத்தொடங்கும்.”

இவர் தெரிவித்தவாறு ஏதேனும் நடைபெற்றதா என்பது வெறுங்கண்ணருக்கும் கண்ணாடிக்கண்ணருக்கும் நன்குதெரிந்ததே. பூமி இன்று— எதை எழுதுந்தருணத்தில்கூட— சூரியனைச் சுற்றித்தான் வருகிறது. இன்னும் தனித்த— குயவன் திகிரியாகவில்லை.

“வைவசுவதமநுவின் காலத்தில் உலககிற்குக்கடைநாளாக இருக்கும் ரேவதி நட்சத்திரத்தை ஆங்கில எழுத்தினால் சங்க்யை செய்யின் 75 ஆகும். அதுவே அடுத்துவரும் தினத்தின் பிரமாணமென முடிவுகாலில் ஏற்படும்” என்கிறார்.

படிப்போர்களே! இதன்பொருள் உங்களுக்கு ஏதேனும் விளங்கினால் தயவு செய்து எழுதுங்கள். ரேவதி என்பதை ஆங்கில எழுத்தினால் சங்க்யை செய்கிறதாம்! இது என்ன பாஷை? ரேவதி என்ற சொல்லை வேறு பாஷைக்குக்கொண்டுபோய் இவர் என்னசெய்கிறார் என்பதும் இவருக்கே விளங்கவேண்டும்.

“ஆதலால் முன்னுரைத்த ‘டே’ என்னும் சங்க்யைக்கு 30 மணியாகுமென்றேற்படும். அதினும் 30ஐ சங்க்யைப்படுத்தினால் 100 ஆகும். அதற்கு சதம் என்பதால் இகத்துள்ளோரை அவ்வாறுசெல்வதோடு வருடகால அளவும் முன்குறித்தவாறே” என்கிறார். ‘டே’ யாவது, ‘சங்க்யை’ யாவது இவர்க்குத் தட்டில்லாமல் கைச்சரக்காகமலிந்துள்ள சங்கைதான். இரண்டொரு பதங்களை எடுத்துக்கொண்டு தமிழ் ஸம்ஸ்கிருதம் ஆங்கிலம் முதலிய எந்த எந்த பாஷைகளுக்கோ தாண்டிச்சென்று உளறிக்கொட்டுவதோடு ‘பிரளயம்வந்து உலக முழுகப்போகின்றது’ என்று பாமரஜனங்களுக்கு வீண் பீதிகரமானவிஷயத்தையும்எழுதுகிறார். ‘இயற்கை நியமத்தின் அளவையறியாது ஏன் மாறுதலாகக் கூறுகிறீர்?’ என வினவினால் “5027ம் வருடம் முடிவுரை உலகில் என்ன நடக்கிறதென்பதைப் பார்த்துக்கொண்டிரு” என்கிறார். இது என்ன யுக்தி? “பின் நூல்களிலிருந்தும் அனுபவ

யுக்திகளிருந்தும் தினே தினே கண்டுபிடிக்கப்பட்டு நூதனமாய் வெளிவரும்'' என்கிறார். இவரது அபூர்வக் கண்டுபிடித்தல்களை யும், தீர்க்க தரிசனத்தையும் குறிப்பில் பார்த்துக் கொண்டால் பொது ஜனங்கள் பீதியடையாமலிருப்பார்களென்பது திண்ணம். 'இனியேனும் நமது நண்பர் மஹான்களின் பேரைக்கூறி அல்லது பழைய ஏடுகள் என்று பூச்சாண்டிகாட்டி ஸாதுஜனங்களின் மனத்தைக் கலக்காமலிருக்க வேண்டி இச்சிறிய விஷயத்தில் அன்பர்களின் பொழுதை இவ்வளவு மட்டும் செலவிடவேண்டிய தாயிற்று' என்று வணக்கமாகத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

குறிப்பு:—வால் வெள்ளிகளைப்பற்றி ஸ்ரீ வராஹ மிஹிராது பிருஹத் ஸம்ஹிதையில் மிகவிரிவாகக் கூறப்பட்டிருக்கின்றது. அதில் கேது சாரங் கூறுகின்ற 11 வது அத்தியாயத்தில் 1000 வகையான வால் வெள்ளிகளின் விபரங்கள் கூறப்படுகின்றன. அவற்றில் அழகிய சிறிய வால் வெள்ளி தோன்றுவதை மாத்திரம் உலகின் நன்மையாகக் கருதலாமென்றும் மற்றயாவும் உலகினுக்கு உண்டாகா நின்ற பலவகைத் தீங்குகளையேஉணர்த்துவன வென்றும் கூறுகின்றார்.

சமயாம்ருதம் என்ற நூலில் ஜலாம்சம்வாய்ந்த கேதுக்கள் மூன்று என்றும், அவை முறையே ஊர்மிகேது சுவேதகேது தூமகேது என்றழைக்கப்படுமென்றும், சுவேதகேது காணப்படுமாயின் கொடியபஞ்சம் உலகில் தோன்றி மனிதரை மனிதர் பிடித்துத் தின்னுங்காலமாகவும் கருதுமாறு துன்பமுண்டாகுமென்றும் கூறப்பட்டிருக்கின்றது. உலகின் தீங்குகள் குறையுந் தோறும் இதன் பயன்மாறும். அந்த முறையில் மனிதர்க்குக் கடவுள் செய்கின்ற அபாயக் குறியாகவே தூமகேதுவை—சுவேத கேதுவைக் கருதவேண்டும். ஆனால் எவ்விதக் கேதுவும் நமது அன்பர் கூறுகின்றபடி காணப்படவில்லை.

ஆகவே, 'உலகம் பிரளயத்திலகப்படப்போகின்றது' என்ற கவலையேனும், 'நாள் 75 நாழிகையாக நீண்டுவிடப்போகின்றது' என்ற கவலையேனும் தமிழ் நாட்டினர் மனதில் குடியேற வேண்டிய அவசியமில்லை. எல்லோரும் ஈசனை மறவாது தம் தம் தொழிலைச் செய்து நலம் பெறுக.

குறிப்பு:—'சுவேதகேது' என்ற சொல்லின் பொருளை நன்குணர்ந்து நமது ஜோதிட நேயர் வருங்கால விளைவுகளைக் கூறுவாரானல் அதனை உலகம் நம்ப இடமுண்டு. அதன் வரலாற்றை பிருஹத்ஸம்ஹிதை போன்ற நூல்களில் கண்டு கொள்ளலாம். அவ்வாறு சாஸ்திர ஆதாரமுணர்ந்து கூறுவதே நம் நாட்டவரின் வழக்கமாயும் அறிவாளிகளின் பார்வைக்கு ஏற்கத்தக்கதாயும் இருக்கின்றதென்பதைக் கூறவும் வேண்டுமோ ?

T. K. ராம்பத்ரசர்மா.

---

# கல்பாத்தியில் ரதோத்ஸவம்.

ஆரியர்களே ! முன் நமது பத்திரிகையில் பாலக்காட்டில் உள்ள ஈழுவர்களை ஆர்யஸமாஜத்தவர்களாக்குவதற்காக வடகோடியிலிருந்து ஸ்வாமி சிரத்தானந்தர் ஆடம்பரத்துடன் வருகிறாரென்ற விஷயத்தை வெளியிட்டிருந்தேன். அதன்படியே ஸ்வாமி அவ்விடம் வந்துவிட்டார். வழியில் மதாஸில் இரண்டொருதினம் தங்கிவிட்டு அங்குவேண்டிய உபசாரங்களைப் பெற்றுக்கொண்டு பாலக்காடு வந்துசேர்ந்தனர். இங்குக் கல்பாத்தி யென்னும் கிராமம் உண்டு. அதில் பிரதிவருடமும் கார்த்திகை மாதம்வாகில் விமரிசையான தேவோத்ஸவம் நடைபெறும். இஃது, அநாதிகாலமாய் நடந்துவருகிறது. இதில் ஈழுவர்கள் என்ற அத்தேசத்திய தாழ்ந்தவகுப்பினர்களை ஆர்யஸமாஜத்தார் வந்து தமது மதத்திற்சேரும்படி வஞ்சித்துப் பலரை அம்மதத்தில் புகச்செய்து அவர்களுக்கு உபநயனஸ்ம்ஸ்காரம் என்ற அம்மதச்சடங்கைச் செய்து பூனூல் தரிக்கச்செய்து அம்மதத்தின் காயத்ரீஜபத்தையும் ஜபிக்க உபதேசம் செய்துவருகின்றனர். இதனுல் இவர்களெல்லோரும் பிராம்மணர்களாய்விட்டனராம். இத்தகைய பிராம்மணர்களைச் சேர்த்துக்கொண்டு கல்பாத்தி முதலிய ஸமீபக்கிராமங்களிலும், கோயில்களிலும்புகவேண்டுமென்று சிரத்தானந்தரும், அவரது ஸகாக்களும் அட்டூழியம்செய்யத்

தலைப்பட்டனர். பிராம்மணர் முதலிய வர்ணாச்ரமிகள் இவ்வட்டூழியத்தைச்சகியாது அவர்களை அவ்விதம் நுழைபாதவாறு தடைசெய்தனர். இதனிமித்தம் கலகமுமேற்பட்டது. அது முற்றிவிடுமோவெனப் பயந்து வர்ணாசரமிகள் "இவ்விதம் அக்கிரமமாய்க் கலகஞ்செய்யக் கங்கணங்கட்டிக்கொண்டு தேசாந்தரத்திலிருந்துவந்திருப்போரை அடங்கச்செய்து தொன்றுதொட்டு நடக்கும் எங்களது தேவோத்ஸவத்திற்கு யாதொரு இடையூறுமின்றிக்காப்பாற்றிக்கொடுக்க வேண்டும்" என்று கவர்ன்மெண்டுக்கு விண்ணப்பம் செய்துகொண்டார்கள். உடனே காருண்ய கவர்ன்மெண்டார் 144-வது தடையுத்தரவை எதிரிகளிடம் பிரயோகித்து உத்ஸவத்தை இடையூறின்றி நடக்க ஏற்பாடுசெய்துவிட்டனர். இஃது இப்படியிருக்கச் சிரத்தானந்தர் 'தாம் வந்த காரியம் பலிக்கவில்லை' என்று ஏங்கி ஆங்காங்குத் தமது மதத்தைச்சார்ந்தவர்களைச் சேர்த்து ஸபையென்று சொல்லிக்கொண்டு அச்சபையின் துணையால் "கவர்ன்மெண்டார் செய்தது மிகத் தவருன காரியமென்று பாலக்காடு வாஸிகள் கண்டிக்கின்றனர்" என்று ஒரு தீர்மானத்தையும் செய்துவிட்டனர். இங்குச் சற்று கவனித்துப்பாருங்கள்! பாலக்காடுவாஸிகள் என்று மொத்தமாய்ப்பெயரிட்டுச் சுதேசமித்திரன் பிரசுரித்துவிட்டது. அச்சபையில் எத்துணைப்பெயர் இருந்திருக்கக்கூடும்? ஆரியஸமாஜத்தில் சேர்ந்த ஈழுவஸகோதரர்களைத் தவிர யார் இருந்திருக்கலாம்? மற்றப்படி படித்த புத்திமான் எத்துணைப்பெயரென்றுகேட்டால் ஸ்வாமி என்ன பதிற்கூறுவரோ? —

மற்றும் அச்சபையில் பேசும்போது "நமது கால்களில் அசுத்தம்பட்டால் காலை வெட்டிவிடுவோமா? அவைகளைக்கழுவிச் சுத்தம்செய்துகொள்ளுகிறதில்லையா? அதுபோல் நம்முடைய ஒடுக்கப்பட்ட ஸகோதரர்களின் தோஷங்களைவிலக்கிச் சமூகத்திற்சேர்த்துக்கொள்ளவேண்டும் அல்லவா?" என்கிருர். இது பூராவும் ஒப்புக்கொள்ளத்தக்கதே. ஆனால் ஸ்வாமிமட்டிலும் இதை ஆழ்ந்துபார்க்காமற்பேசுகிருரே என்பதுதான் விசனிக்கத்தக்கது. பாருங்கள்! நம்முடைய கால்களில்அசுத்தம்பட்டால் கழுவிச் சுத்தப்படுத்திக்கொள்ளுகிறேம். படுக்கையில் படுத்துக்கொண்டால் தலைக்குப்போல் காலுக்கும் தலையணைபோடுவோம்.

குளிரும்போது காலுக்கும் போற்றுவோம். ரணம்வந்தால் அப்போதும் டாக்டரிடம் காட்டுவோம். ஆனால் சுத்தம்செய்த கால்மட்டிலும் தான் செய்யும்வேலையைத்தான் செய்யவேண்டும். இருக்கவேண்டியவிடத்தில்தானிருக்கவேண்டும். அதைவிட்டுச் சாப்பிடும் அன்னத்தைக் கையால்தொடுவதுபோல் காலாலும் தொடுவேனென்று தொடலாமா? பூஜைசெய்யும் புஷ்பத்தை நானும் பகவானின்மேற்போடுகிறேனென்று முன்வருவது காலுக்கழகா? நாங்கள்தான நடக்கவேண்டுமென்கிற நியமமென்ன? உங்களைப்போலத்தானே நாங்களும். ஆகையால் கொஞ்சநாள் கைகளும் நடக்கட்டும், தலைநடக்கட்டும் என்று அவை சொல்ல முடியுமா? முடியாதல்லவா! அதுபோல அந்தந்த வருணத்தவர் தத்தமக்கேற்பட்ட காரியத்தைத்தாமே செய்யவேண்டும். தாங்களிருக்குமிடத்தில்தான் நிற்கவேண்டும். அவ்விதமிருந்தால் தான் நாமும் ஸகோதரர்களைப்போல் பாவிப்போமென்பதை ஸ்வாமி அறியவில்லையேயென வருத்தம்மேலிடுகிறது. இங்கே ஒன்றுமறியாத சில ஏழைகளை வைத்துக்கொண்டு ஸபையென்று சொல்லலாமா என்று சிலர் வினவுவது நியாயமல்லவா?

இது கொண்டு பாலக்காடு ஜனங்களென்று பிரமிக்கும்படி அவ்வளவு அழகாய் உத்ஸாகமாய் மித்திரன் புகழ்வதை உண்மை தெரிந்தவர்கள் நம்பிவிடமாட்டார்கள். இனி, அரசாங்கத்தின் ஆணையைமீறி ஸ்வாமி ஜயிலுக்கும்போகத் தயாரென்கிறார். இவ்வித தைரியமில்லாமலா வடக்கேயிருந்து சிரமத்துடன் இங்கு வருவார். 'தாம் போகும்காரியம் அதிக்கிரமம்தான்; அதனால் கலகமேற்படலாம்; அக்கலகத்தால் நமக்கு ராஜாங்கத்தில் கிடைக்கும் ஸன்மானத்தையும் பெறவேண்டியதுதான்' என்றே வந்திருப்பார். இல்லாவிடில் இவ்வார்த்தைகூற நியாயமில்லை. இது விஷயத்தைப் பற்றி காந்திக்கும் மாளவியாகீக்கும் தந்தி கொடுத்திருப்பதாயும் கூறிவிடடார். காந்தி வைக்கம் கலகத்திற்கு வந்துவிட்டுத் தான் நினைத்த காரியம் நடக்கவில்லையென்று பேசாமற் போய்விட்டதை ஸ்வாமி எவ்விதமறியக்கூடும்? அது ஞாபகத்திலிருந்தால் அங்கிருந்து வந்திருக்கவேமாட்டார். வந்தாலும் நிலைமையைப் பார்த்துவிட்டுப் பேசாமல் கௌரவமாய்ப் போயிருக்கலாம். அவ்வளவு தூரம் லௌகிகமில்லாததால் வீண் ஆக்கிரகம்

கொள்கிறார். ஏதோ தங்களுடைய ஸ்வாதந்திரியத்தைத் திரும்பப் பெறுவதற்காகப் பாடுபடுகிறதாய் ஸ்வாமி சொல்லிக்கொள்கிறார். இங்கு என்ன ஸ்வாதந்திரியம் இவர்களுக்கேற்பட்டிருந்ததோ தெரியவில்லை! எத்துணை நாட்களுக்கு முன்னால் இவர்களது ஸ்வாதந்திரியத்தை விட்டார்களோ? ஒன்றுமில்லை. அநியாயமாய்க் காலராஜனின் தூதர்கள்போல் இவர்கள் தோன்றி எல்லோரும் ஒன்றுதானென்று சொல்லி அறியாத ஏழை ஈழுவர்களை மயக்கி அவர்களைப் பிழைக்கக்கூட வழியின்றித்தவிக்க வெளியில் இழுத்துவிடத் தோன்றி விட்டார்கள். இன்னொன்று பாருங்கள். ஆர்யஸமாஜத்தார் 'அக்கிரகாரத்திற்குள் போகக்கூடாதா? கோயிலில் நுழையக்கூடாதா" என்று அதிகாரிகளை ஸ்வாமிகேட்டனர். அதற்கு அரசாங்க அதிகாரி "ஆர்யஸமாஜத்தார் போகலாம், ஆனால் நேற்று ஈழுவர்களாய் இருந்து விட்டு இன்று ஆர்யஸமாஜத்தில் சேர்ந்தவர்கள் போகக்கூடாதென்பது தான் ஜனங்களின் கோரிக்கை" என்றார். அதற்குமேல் ஸ்வாமி "எங்களது மதத்தில் மேல்ஜாதி கீழ்ஜாதி என்று கிடையாது" என்று சொன்னார். அதற்கு மேல்அதிகாரி ஒன்று சொல்லியிருக்கலாம் அதாவது "உங்கள் மதத்தில் மேல்ஜாதி கீழ்ஜாதி யென்பதில்லாவிடினும் இந்து மதத்தில் அந்தப் பாகுபாடு சில நியமங்களைக் கொண்டு சிற்சில காரியங்களிற் கொண்டாடப்படுகிறது. ஆகவே அக்கிரகாரத்திலும் கோயிலிலும் நுழைய உங்களுக்கு பாத்தியமில்லை" என்பது. ஆனால் இவ்வளவு சொல்ல அதிகாரி அனுவசியம்என்று வது நாம் இவ்வார்த்தையைக்கூறுவானேன். சொல்ல வேண்டியவர் சொல்வாரென்று உதாஸீனமாய் விட்டார்போலும். உண்மையில் ஸநாதன இந்து மதத்திற்கும் ஆரியஸமாஜமதத்திற்கும் பெரிய வேற்றுமை உண்டென்பதை நான் பன்முறை இப்பத்திரிகையிலேயே வெளியிட்டிருக்கிறேன். மீண்டு மிங்குக் கூறுகின்றேன். இவர்களுக்கு வேதம் முழுமையும் பிரமாணமாகாது தங்கள் மனதிற்கிசைந்தபடி பொருள் கொடுக்கும் வாக்கியங்கள் உள்ள வேதபாகம் தான் ஸத்தியம். அவர்கள் கூறும் அர்த்தம் வேத பாஷ்யங்களிற் காணுமேயன்றல் அந்த பாஷ்யம் அவர்களாலேற்றுக் கொள்ளப்படுகிறதில்லை. தபோபலத்தாலும் ஈசனின் அருளாலும் ரிஷிகள் இயற்றிய வேதங்களின் அர்த்தங்களையே

வெளியிடுகிற ஸ்மிருதிகளும் அவர்களுக்குப் பிரமாணமல்ல. லோகாசார்யர் வாக்கை நம்புகிறதில்லை இனி இதைக்காட்டிலும் என்ன சொல்ல வேண்டும்? இவர்கள் இந்து மதஸ்தர்களாவார்களா? 'இம்மதத்தாரை இந்து மதத்தார் என்று ஸநாதன ஹிந்து மகா ஸபா என்ற ஸபை ஒப்புக்கொண்டிருக்கிறதே' என்றால் அச்சபையோர்களின்நோக்கம் யாதெனத்தெரிந்துகொள்ளலாம். ஆரியஸமாஜத்தார்கள் கோயிலிலும் அக்கிரகாரத்திலும் போகலாமென்று பாத்தியம் கொண்டாடுகிறார்களே அதற்குத்தான் நியாயமுண்டாவென்பதைக்கவனியுங்கள். இவர்களுக்குக்கோயில் உண்டா? விக்ரகம் உண்டா? வர்ணாசிரமதர்மம் உண்டா? இவற்றுள் ஒன்றையுமேற்காத இவர்கள் இவைகளைக் கொண்டாடுபவர்களுக்கு நேர் விரோதிகளல்லவோ? ஆகவே, இவர்கள் இங்கு நுழையக்கூடாதென்று சொல்ல யாது தடை? மற்றும் ஸ்வாமி உண்மையாய் ஆர்யஸமாஜம் என்பதுதான் இந்து மதமென்று நினைத்திருந்தால் பரோபகாரம் செய்யப்புறப்பட்ட இவர் ஈழுவர்களைமுன்னுக்குக் கொண்டுவர முயன்றது சரி, அவ்விதமே அவர்களுக்குத்தம்மதச் கொள்கையை உபதேசித்துவிட்டு "மனுஷ்யர்களெல்லாரும் ஒரே ஜாதிதான் நமக்கு ஏற்றதாழ்ச்சி கிடையாது நாம் கோயிலில் போய்த்தான் தொழவேண்டுமென்பதில்லை, பகவான் எங்குமிருக்கிறார், உங்களைக் கேவலமாய் நினைப்பவர்களுக்கு ஸாத்தியமான மட்டும் நியாயத்தைச்சொல்லிப்பாருங்கள், கேட்காவிடில் அவர்களுடன் விரோதம் கொள்ளாதீர்கள், அவர்களுக்கும் ஸமபுத்தி வரும்படி கடவுளை வழிபடுங்கள், கோபத்திற்கு ஆளாகாதீர்கள் பிராமணர் முதலிய வர்ணாசிரமிகள் இப்போது உங்களை ஸமீபத்திலழையாவிட்டாலும் ஒரு சமயம் அழைப்பார்கள், அது ஸமயத்தை எதிர்பார்த்திருங்கள்" என்றல்லவோ மததர்மத்தை உபதேசிக்க வேண்டும்? இவையல்லவா எல்லாமதத்தினருக்கும் பொதுவான தர்மம்? இதை விட்டுவிட்டு வீணாய் நேற்றுவரை ஈழுவனும் இன்று ஆர்யஸமாஜத்தவராம் இன்றே இவர் கோயிலுக்குள்போகவேண்டுமென்று கலகத்திற்கு இழுத்துவிட்டு வேடிக்கைப்பார்ப்பதா ஸ்வாமிக்கழகு? மகாவீர்யமுள்ள பிர்மரிஷி பிஜமான விசுவாமித்திரர் க்ஷத்திரிய ஸ்திரீயின் வயிற்றிற் பிறந்த தோஷத்தை மட்டிலும் விலக்குவதற்காக எத்துணையோ ஆயிரம்

வருடங்கள் கடும்தவம்புரிந்து பிராம்மண்யத்தைப் பெற்றுரென்று ராமாயணம் முதலிய கிரந்தங்கள் கதறுகின்றன. கடைசியில் வஸிஷ்டர் வந்து பிர்மரிஷி என்று ஒப்புக்கொள்ள வேண்டும் என்று சதுர்முகனிடம் சொன்னதாகவும் கூறுகிறது. இப்படியிருக்க என்ன ஆச்சரியம் பீஜதோஷம் க்ஷேத்திர தோஷத்தால் சண்டாளனுன ஒருவன் ஆர்யஸமாஜத்தாரென்று பெயர் சொல்லிக்கொள்கிற ஒருமனிதனுல் அந்தநிமிஷமேபிராமணனுகிருனும்.

இது இவ்விதமிருக்க 18—11—25ல் சுதேசமித்திரன் பத்திராதிபர் கலத்தில் பத்திராதிபா எழுதியிருப்பதைப் பார்க்க ஆச்சரியமும் பயமும் உண்டாகிறது. அவர் கல்பாத்தியில் நிலமை சரியாய்இருந்ததில் கவர்ண்மெண்டார் தலையிட்டது நியாயமில்லையென்றும், ஈழுவர்கள் என்று முன் காலத்தில் தாழ்த்தப்பட்டது அக்காலத்துக்குப் பொருத்தமாய் இருந்திருக்கலாமாயினும் இக்காலத்தில் ஒவ்வொன்றும் மாறிவரும்போது இதை மட்டிலும் பழையதையே பார்த்துக் கொண்டிருப்பது தகாதென்றும், அவரவர்கள் தமது மானிடப் பிறப்பின் உண்மையை அறிய ஆரம்பித்து விட்டார்களென்றும், ஈழுவர்கள் மகம்மதியர் கிறிஸ்தவர்களாகாமல் நம் மதத்திலேயே இருப்பது சந்தோஷிக்கத்தக்கதல்லவா வென்றும் கூறிவிட்டுப் பிராமணர்களைப்பார்த்தும் புத்தி உபதேசம் செய்து விட்டார். இவர் சொல்வதற்கு நான் முன் எழுதிய விஷயங்களே பதிற்கூறிவிடுமாயினும் ஒன்று மட்டிலும் கூறுகின்றேன். இத்தகைய ஈழுவர்களையும் மற்றும் தீண்டாதவர்களையும் அனியாயமாய் பிராமணர்கள் ஒதுக்கிவிட்டார்களென்றும் நீங்களும் எல்லோரையும் போலிருங்களென்றும் கூறி வீணுய்த் தூண்டிவிடாமல் அவர்களிருக்கும் நிலைமையிலுள்ள சீர்கேட்டை விலக்கி அவர்களுக்கு அடிக்கடி சொல்லக் கூடிய மததத்வத்தைச் சொல்லி வந்தால் ஒருபோதும் அவர்கள் புரளமாட்டார்கள். இப்போதும் ஆங்காங்குத் திக் விஜயம் செய்துவரும் ஸ்ரீ காஞ்சிகாமகோடிபீடாதிபர்களின் முககமலத்தைத் தரிசிதது அனுக்கிரகம் பெற்றுக் கொள்கிற நம் நாட்டுத் தீண்டாச் சகோதரர்கள் அவர்களது திவ்யவாக்கின் உபதேசத்தை வெகுதூரத்திலிருந்து வணக்கமாய்ச் சிஷர்களின் மூலமாய்க்கேட்டு ஆனந்திக்கின்றனர். அத்

தகையோர்களை இந்த மித்திரனே, அந்த ஸ்வாமியே எவரும் தங்களது வழியிலிழுக்க முடியா தெண்பதைத் திண்ணமாய்ச் சொல்லலாம், வீணாய் வளர்ப்பானேன் நமது மித்திரன் பத்திராதிபரை நோக்கி இதைக் கூறுகிறேன். "நமது மதத்தை ஆட்சேர்த்தா பெருக்கவேண்டும்? அத்தகைய மதம் நம்முடையதல்ல. மதத்திற்கு வாடுதல் உண்டானால் பகவானே அவதரிப்பார். நமது மதம் ஒருநாளும் கெடாது. ஆர்யஸமாஜத்தார் உபதேசிப்பது நமது மதத்திற்கு நேர் விரோதம், இதிற் சேராமல் தான்தடுக்க வேண்டும். அப்படிச் சேர்வதைக் காட்டிலும் இஸ்லாமியமதம், கிறிஸ்தவமதம் இவற்றிற்சேர்ந்து விடுவது தாழ்மையல்ல. ஆரியஸமாஜத்தில் சேர்ந்து நம்முடன் கலந்து கோவிலுக்குள் நுழைந்து அக்கிரமம் செய்வதைக் காட்டிலும் இதர மதங்களில் சேர்ந்து கோயிலுக்குள் நுழைந்து பரிஹஸிக்காமலாவதிருப்பார்களென்பதைக் கவனித்தால் நாம் ஸந்தோஷப்படவே நேருமென்பதை கவனித்துப் பார்க்கில் இதில் எது நலமென்பதை நன்கு ஊன்றிப் பார்க்க வேண்டும்." என்ன செய்வோம்? யாரைத்தான் குற்றத்திற்காளாக்குவோம்.

ஐயோ! கலியே, என்ன பிரபாவம்! உனது மகிமையை என்னென்று உரைப்பேன். கிருஷ்ணபகவான் மானிட சரீரத்தை விட்ட நிமிஷமே பூலோகத்தில் இனி ஈசன் வரமாட்டானென்று பயமில்லாமல் கொடிநாட்டி விட்டாய். உனது ஆதிபத்தியத்தில் இதையே கண்டு நாம் ஆச்சரியமடைகிறோமே, இஃது உனது பால சேஷ்டையாம். உனது கௌமார யௌவனதசையில் எவ்விதம் ஆட்சி நடக்குமோ ஆனாலும்.

**निः स्वाध्यायवषट्कारे स्वधा स्वाहाविवर्जिते ।**
**तदा प्रविरलो धर्मः क्वचिल्लोके निवत्स्यति ॥**

அத்தியயனம் ஹோமம் என்ற பேச்செல்லாம் அடங்கிவிடும் அவ்வித மடங்கியபோதிலும் தர்மம் மிக வாடுதலுடன் எங்காவது ஒரு தேசத்திற் பதுங்கிக் கொண்டிருக்கும் என்று சொல்கிறபடி உனது அதிக்கிரமச் செயலை அடக்க தர்மம்ஒருபுறம் விதைபோல் இருக்குமென்பதை மனத்தில் வைத்துக்கொள். தர்மம் எங்களை தலைகாக்கும் அதைக்காப்பாற்றும் குருமூர்த்தி அப்போதுமிருப்பார்.

சுபம்.

M. N. சுப்பிரமணிய சாஸ்திரீ.

ஆர்யதர்மம் 37-வது ஸஞ்சிகையில் வெளிவந்த

## ஓர் ஐய வினவிற்கு விடை.

**विहितस्याननुष्ठानान्निन्दितस्य च सेवनात् ।**
**अनिग्रहाश्चेन्द्रियाणां नरः पतनमृच्छति ॥ याज्ञवल्क्यः ।**

வேதவிஹிதமான கர்மாக்களைச் செய்யாததினாலும், நிஷித்தமான கர்மாக்களைச்செய்வதினாலும், இந்திரியநிக்ரஹம் செய்யாததினாலும், மனிதன் தனதுகர்மாவினின்று நழுவினவனாகஆகிறான். ஆகையால் அவற்றிற்குற்ற பிராயச்சித்தங்களை அவன் அவசியம் செய்துகொள்ளவேண்டும். இல்லாவிடில் நரகத்தையனுபவிக்கும்படி நேரிடும். கௌதமதர்மஸூத்திரத்தில் பிராயச்சித்தம் செய்துகொள்ளவேண்டியதைக் கூறி, அதன் முறையை,

**तस्य निष्क्रयणानि जपस्तपो होम उपवासो दानम् ।**

என்று ஜபாதி ஐந்துகர்மாக்களால் கூறி **उपनिषदो वेदान्तः** என்ற ஸூத்திரத்தினால் ஜபத்தின்முறையையும் கூறியிருக்கிறார். இதில் **अघमर्षणम् रुद्रं** என்ற இவ்விரண்டு மந்திரத்திற்கும் முறையாக யஜுர்வேதமந்திரத்தைக் கூறியிருப்பதால் அதற்கு ஸாமாக்கள் உண்டா? இல்லையா? என்பதே பிரும்மஸ்ரீ K. S. சேஷாராம சாஸ்திரியவர்களின் வினா?

என்து சிற்றறிவிற்கெட்டிய அபிப்பிராயத்தைத் தெரிவிக்கிறேன்— ஸாமவேதத்தில் அகமர்ஷணம், ருத்ரம் என்ற ஸூக்தங்கள் இருக்கின்றன. அவற்றை ஹரதத்தர் கூறவில்லையே என்றால் அதனால் தோஷமேற்படாது. ஸ்மிருதிகளுக்கு வியாக்யானம் செய்பவர்கள் மற்ற ஸ்மிருதிகளையனுஸரித்தும் ஒன்றுக்கொன்று விரோதமேற்படாமலும் எழுதுவது வழக்கம். அதுபோலவே ஹரதத்தரும் வஸிஷ்டஸ்மிருதியை அனுஸரித்து எழுதியிருக்கலாம். ஆகையால், பாதகமொன்றுமில்லை, ஸாமவேதம் க்ருஹ்ய பரிசிஷ்டம் என்ற கிரந்தத்தில் பாகுரி என்னும் மகரிஷியால்கூறப்பட்டிருக்கிறது.

अथातोऽघमर्षणविधिं व्याख्यास्यामः– आचान्तस्सोत्तरीयकः प्राङ्मुख उदङ्मुखो वा नद्यां प्रवाहमुख आपोहिष्ठेत्यादिभिः प्रोक्षणं राजनरौहिणे बृहद्रथन्तरे पुरुषगतिर्महानाम्न्यो महावैराजं महादिवाकिर्त्यं ज्येष्ठसाम बहिष्पवमानं सावित्रं वामदेव्यमघमर्षणानित्येतेषामेकमनेकं वा सर्वाणि वा प्रयुञ्जन् स्नानं कुर्यात् सर्वपापेभ्यः पूतो भवति य एवं यस्स्नाति भ्रूणहादिभ्यश्च मुच्यते रूपंतेजो यशश्शौर्यमायुष्यमारोग्यमलोलुपन् दुस्स्वप्ननाशास्तपो मेधाभवन्ति मेधाभवन्तीति भगवान् भागुरिः ॥

ஸாமவேத கிருஹ்யபரிசிஷ்டம் என்ற கிரந்தத்தில் இந்த राजनं, रौहिणं, बृहत्साम, रथन्तरं, पुरुषगतिः, महानाम्न्यः, (மகாநாம்நிபர்வம்) महावैराजं, महादिवाकीर्त्यं, ज्येष्ठसामानि त्रीणि बहिष्पवमानं, सावित्रं, वामदेव्यं என்று 17 ஸாமாக்கள் சேர்ந்தது, அகமர்ஷணம் என்று கூறப்பட்டிருக்கிறது. அங்ஙனமே ருத்திரமும், ஸாமவிதானம் என்ற கிரந்தத்தில் அடியில் வருமாறு வரையப்பட்டிருக்கிறது,

आवोराजा तद्वो वर्ग आज्यदोहानि देवव्रतानि चैवां संहितैतां प्रयुञ्जन्रुद्रं प्रीणाति । अवोराजा (१) तद्वोवर्गः (४) आज्यदोहानि (३) देवव्रतानि (३)

ஆக (11) பதினொரு ஸாமாககளைச்சேர்த்துப் பூஜிதது ஸர்வேசுவரனைப் பிரீதிசெய்கிறுன் என்று கூறப்பட்டிருக்கிறது. இன்னும் இதன்பேதங்களைவாமனகாரிகைசாட்யாயனகாரிகை,ஸாமவிதான பிராம்மணம் கிருஹ்யபரிசிஷ்டம், முதலிய கிரந்தங்களில் விவரமாகக்கூறியிருப்பதால் அவ்விடமும் பார்த்துச் சந்தேகங்களைத்தெரிந்துகொள்ளும்படியாய், ஷை சாஸ்திரிகள் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

K. R. வைத்தியநாதசாஸ்திரியள்,
மேலக்காவேரி